முதன்மை சார்பு நீதிமன்றம், கரூர்.

I.A 1/2020 in I.A 994/2016 in Original Suit No. 187/2009

**2022ம்** ஆண்டு **ஜுலை திங்கள் 07**ம் நாளன்று வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54 விதியின்படி 95வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி) திருமதி.தனம், பென்ச் கிளர்க் கிரேடு–2 என்பவரால் உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| பெயர்– | செல்வகுமார் | தொழில் – சர்வேயர் |
| த.பெ | குப்புசாமி | வட்டம் – புகளூர் |
| கிராமம் – | அத்திப்பாளையம் | மதம் – இந்து |
| ஜாதி – | | வயது – 34 |

முதல் விசாரணை

இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பதற்காக மனுதாரர்கள் தரப்பில் அழைப்பாணை அனுப்பட்டதன் பேரில் சாட்சியம் அளிக்க ஆஜராகி இருக்கிறேன். நான் புகளூர் தாலுகா, பரமத்தியில் குறுவட்ட அளவர் பொறுப்பில் இருந்து வருகிறேன். மனு சொத்தை அளவீடு செய்யும் போது நான் கரூர் வட்டம், தோரணக்கல்பட்டி குறுவட்டம் குறுவட்ட அளவராக இருந்தேன். மனு சொத்தை 2019ம் ஆண்டு ஜனவரியில் அளவீடு செய்தோம். மனு சொத்தில் மொத்தம் 11 சர்வே எண்கள் உள்ளன. அதில் முதலில் 338/2 சர்வே எண்ணை அளவீடு செய்தோம். நீதிமன்ற ஆணையர் உங்களுக்கு நிலம் அளப்பதற்காக அறிவிப்பு எதுவும் கொடுத்தாரா என்றால் தபால் மூலம் கொடுத்தார் அதில் சொத்து விபரம் இருந்தது. அதை நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை. சர்வே எண் 313/2 ல் மொத்த விஸ்தீரணம் 3 ஹெக் 65 ஏர்ஸ். அதில் தாவா சொத்து என்பது 3ல் 1 பாகம் தான். 1 .21.66 ஹெக்டேர். ஏக்கர் அளவில் பார்த்தால் 3 ஏக்கர். அதில் வாதிக்கு உரிய 9/21 பாகம் எவ்வளவு என்றால் 1 ஏக்கர் 28 ½ செண்ட். எனது சர்வே வரைபடத்தில் வாதி மலர்கொடிக்கு உரிய பாகமாக 3 ஏக்கர் 85 செண்டை ஒதுக்கினோம். ஆனால் அது முதல்நிலை தீர்ப்பாணையின் படி தவறு தான். அதே போல் சர்வே எண் 347/15 ல் மொத்த சொத்து 0.15 ஏர்ஸ்

அதன் மொத்த விஸ்தீரணம் 37 செண்ட். அதில் தாவா சொத்து என்பது 12.33 செண்ட் அதில் வாதி கோரிய பாகமான 9/21 என்பது 5.28 செண்ட். எனது சர்வே வரைபடத்தின் படி மனுதாரர் / வாதிக்கு 15.8 செண்டை ஒதுக்கியுள்ளோம். அதுவும் முதல் நிலை தீர்ப்பாணையின் படி தவறு தான். மேலும் சர்வே எண்.314/2 ல் ஒரு கிணறு உள்ளது என்றால் இல்லை. சர்வே எண் 314/3 ல் தான் கிணறு உள்ளது. அந்த கிணறு சர்வே எண் 314/2 ற்கு கட்டுப்பட்டது என்றால் அதை பற்றி என்னால் சொல்ல முடியாது. நீதிமன்ற உத்தரவுபடி மனு சொத்தை நீங்கள் 21 பாகமாக பிரிக்கவில்லை என்றால் மேற்படி 2 சர்வே எண்ணை பொறுத்து தவறாக பிரித்து விட்டேன். பாதையை குறிப்பாக எனது வரைபடத்தில் மனு சொத்துக்கள் அனைத்திற்கும் சொல்லவில்லை. அதே போல் பூஸ்துதியிலும் தாவா சொத்தின் பாதையை பொறுத்து எதையும் சொல்லவில்லை. மேலும் எனது வரைபடத்தில் பாதையை பிரித்து நான் காட்டவில்லை. ஆகவே உங்களுடைய அறிக்கை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் அதை பொறுத்து என்னால் கருத்து சொல்ல முடியாது. நான் தனியாக அறிக்கை எதையும் தாக்கல்செய்யவில்லை.

**1ம் எதிர்மனுதாரர் / வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

வட்டாட்சியர் அனுமதியின் பேரில் தான் நீதிமன்ற உத்தரவின் பேரில் கடந்த 12.01.2019 ல் அளந்தேன். தாவா சொத்தை அளந்தபோது கிராம நிர்வாக அலுவலர் சொத்தைபொறுத்த ஆவணங்கள் அனைத்தையும் எடுத்து வந்திருந்தார்கள் அந்த ஆவணங்களின் படி தான் தாவா சொத்தை அளந்தேன் என்றால் சரிதான். கிராம நிர்வாக அலுவலபர் அங்கு வந்து தாவா சொத்தை பொறுத்த ஆவணங்களை ஒப்படைத்து விட்டு பிறகு அவர் உதவியாளரை விட்டுவிட்டு அவர் அங்கிருந்து சென்றுவிட்டார். புல படத்தின் படி எல்லை கற்களை கண்டறிந்து அதன் அடிப்படையில் தான் அளந்தேன். சர்வே எண் 313/2, மற்றும் 347/15 ல் மட்டும் 1/3 பாக சொத்தை அளக்காமல் மொத்த சொத்தையும் அளந்து அதில் மனுதாரர் / வாதிக்கு முதல் நிலை தீர்ப்பாணையை

விட கூடுதலாக ஒதுக்கிவிட்டேன் அதே போல் பிரதிவாதிக்கும் ஒதுக்கிவிட்டேன். தாவா சொத்தை அளந்தபோது அது மானாவாரி இடமாக தான் இருந்தது. நீர் பாசனத்திற்கான தடயங்கள் அங்கு இருக்கவில்லை. சில சொத்துக்கள் தார் சாலையை ஒட்டியும், சில சொத்துக்களை பாதை இல்லாமலும் இருந்தது. அதனால் தான் வரைபடத்தில் சாலையை காட்டவில்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு

அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்துசெய்தார்.
(ஒம்/– R.கோகுல் முருகன்),
முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.